கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

LIBRARY JUL 2004 Eastern University, Sri Lanka

பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி – II 1999/2000 (வெளிவாரி)
(டிசெம்பர்-2003/ஜனவரி-2004)

**PS 302 அரசியல் கட்சிகள் அமுக்க குழுக்கள் பொதுசன அபிப்பிராயம்**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. ‘ஜனநாயகம் சிறப்பாக செயற்படுவதற்கு எதிர்க்கட்சிகளின் பங்களிப்பு மிக அவசியமாகும்’. இக்கூற்றினை ஏற்றுக்கொள்கின்றீரா? உமது விடைக்கு காரணங்கள் தருக.

02. கட்சிமுறையின் வகைப்பாட்டை அடையாளம் கண்டு, அவற்றின் சாதக பாதக தன்மை பற்றி ஆராய்க.

03. இந்தியாவில் அண்மைக்காலங்களில் ஒரு கட்சி ஆதிக்கமுறை செயலிழந்து போனமைக்கான காரணங்களை விளக்குக.

04. “அமெரிக்கா உலக வல்லரசாகவும், உள்நாட்டில் அரசாங்கம் சிறப்பாக செயற்படுவதற்கும் காரணம் அங்கு காணப்படும் இருகட்சி முறையாகும்”. கருத்துரைக்க.

05. இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கம் எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளை விளக்குக.

06. “இலங்கைக்கு பலகட்சி ஆட்சிமுறை பொருத்தமற்றது, இருகட்சி ஆட்சிமுறை பொருத்தமானது.” கருத்துரைக்க.

07. (அ) அமுக்க குழுக்கள் என்றால் என்ன?
(ஆ) அமுக்க குழுக்களின் இயல்பினை மிக நுணுக்கமாக பரிசிலிக்குக.

08. அமுக்க குழுக்கள் சட்ட, நிர்வாக, நீதித்துறைகளில் எவ்வாறான பங்களிப்பினைச் செய்கின்றது என்பதனை தெளிவாக்குக.

09. இலங்கை அரசியலில் வெகுசன தொடர்புச்சாதனங்களின் பங்களிப்பினை மதிப்பிடுக.

10. பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(அ) இந்தியாவில் B.J.P கட்சியின் அண்மைக்கால போக்குகள்
(ஆ) ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி – ஜே.வி.பி கூட்டு ஒப்பந்தம்.
(இ) இலங்கையின் இனமுரண்பாடு தொடர்பாக தமிழ் நாட்டில் காணப்படும் பிரதான கட்சிகளின் நிலைப்பாடு.
(ஈ) பிரித்தானியாவில் தொழிற்கட்சி

********